பரிசுத்த பவுல் ஆலயம்

# அஹமதி தமிழ் திருச்சபை

## 45 ஆவது ஆண்டு விழா சிறப்பு மலர்

சபையின் வாக்குத்தத்தம்

# ..நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்.

எரேமியா18:6

சிறப்பு செய்தி மலர்
2021
நவம்பர்

மலர் -18
இதழ் -7



# சபை ஊழியரின் அன்பு மடல்



கர்த்தரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நமத்தில் சபையோர் யாவரையும் வாழ்த்துகிறேன்.

கர்த்தர்தாமே நம் அனைவரையும் சந்தோஷத்தோடும், சமாதானத்தோடும், தேவ கிருபையால் நடத்தி வந்திருக்கிறார். அதன் பலனாக இன்று சபையின்45 ஆம் ஆண்டு விழாவை அனுசரிக்க தேவாதி தேவனுக்கு நன்றி சொல்லி ஸ்தோத்தரிக்க கர்த்தர் நமக்கு கிருபை பாராட்டி இருக்கிறார்.

**ஒருவரையொருவர் அன்பின் முத்தத்தோடே வாழ்த்துதல் செய்யுங்கள். கிறிஸ்து இயேசுவுக்குள்ளான உங்கள் அனைவருக்கும் சமாதானமுண்டாவதாக. ஆமென். (1 பேதுரு 5:14)**

நமது "அஹமதி தமிழ் திருச்சபை" யை தேவமகிமைக்காக ஆரம்பித்து, உருவாக்கிய, வளர்த்த, நடத்தி வந்த தேவ பிள்ளைகளுக்காக, ஊழியத்தில் இருக்கிற ஒவ்வொருவரின் சார்பாகவும் கர்த்தருக்கு கோடான கோடி நன்றிகள் சொல்லுகிறேன்.

நமது சபையை உருவாக்கினவர்களில் ஒரு சிலர் கர்த்தருக்குள் நல்ல இளைபாறுதல் பெற்றிருக்கிறார்கள். அநேகருக்கு நல்ல சுக பெலன், ஜீவன் தந்து கர்த்தர் காத்து வருகிறார் , அவர்கள் அனைவருக்காகவும் நாம் அனைவரும் இணைந்து தேவ சமூகத்தில் ஜெபிப்போம்.

**முந்தின ஆலயத்தின் மகிமையைப்பார்க்கிலும், இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரியதாயிருக்கும் என்றுசேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; இவ்விடத்திலே சமாதானத்தைக் கட்டளையிடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார் ( ஆகாய் 2:9)**

அன்று ஆகாய் தீர்க்கதரிசியின் மூலமாய் செருபாபேலுக்கும், யோசுவாவுக்கும் சொல்லப்பட்ட இத்தனை மகிமையான வார்த்தை. ஆசீர்வாதமான வழி காட்டுதல், இன்று நமக்கும். நம்முடைய தலைமுறைக்கும், தலை முறை தலைமுறைக்கும், உரியது என்பதில் நமக்கு பூரண நம்பிக்கையுண்டு இவ்விதமாய் கர்த்தர் நமது சபையை இத்தனை ஆண்டுகள், நடத்தி வருகிறார்.

எளியவன் என்றைக்கும் மறக்கபடுவதில்லை, சிறுமைப்பட்டவர்களுடைய நம்பிக்கை ஒரு போதும் கெட்டுபோவதில்லை, ஆம் நமது சபைக்கு 2021 ஆம் வாக்கு கொடுத்து "என் ஜனங்கள் ஒரு போதும் வெட்கபட்டு போவதில்லை" என்றும் கெட்டுபோவதில்லை என்றும் சொல்லி நம்மையும், நமது சபையையும் அவருடைய பெரிதான கிருபையினாலே நடத்தி வந்த தேவனுக்கு சபையோராகிய நம் அனைவரும் இருதயத்தின் ஆழத்திலிருந்த நன்றி சொல்லவோம்.

பரிசுத்த பவுல் ரோமர் 15 ல் கூறியபடி பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும், சமாதானத்தினாலும், உங்களை நிரப்புவாராக,

நாம் அநேக காரியங்களில் ஆசீர்வாதங்களின் பெலன் கொண்டு கழுகைபோல சிறகடித்து எழும்பி ஊழியத்தின் பாதையில் வளருவோம், அதற்கு கர்த்தர் கிருப செய்வாராக.

நம்மில் ஒவ்வொருவரும் பிறருடைய பக்தி விருத்திக்கேதுவான நன்மையுண்டாகும்படி யாவரையும் நமது ஜெபத்தில் தாங்கி வழிநடத்துவோம், தேவ பெலன் கொண்டு திடமனதாயிருப்போம். எந்த தீங்கும் நம்மை தீண்டாது வாதை நம் கூடாரத்தை அணுகாது

பிரியமானவர்களே நம்மைநாமே தாழ்த்தி அவரிடத்தில் ஒப்புவிப்போம் 45 ஆம்ஆண்டு முடிந்து 46 ஆம் ஆண்டிற்குள் பிரவேசிக்கிற நமது சபையையும் நம் ஒவ்வொருவரையும், தேவாதிதேவன் வாக்கு கொடுத்து அழைக்கிறார். அழைத்தவர் உண்மையுள்ளவ் அவர் நம்மை வழி நடத்த வல்ல தேவனாய் இருக்கிறார்.

## ...நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்.. (எரே 18:6)

ஆம் பிரியமானவர்களே நமது சபையும் நாமும் கர்த்தருடைய கரத்தில் இருக்கிறபடியால் நான் கர்த்தரை ஸ்தோத்தரிக்கின்றேன் .

குயவன் தன் கரத்தினாலே நல்ல களிமண்ணை எடுத்து, பக்குவமாக பிசைந்து, தன் கரங்களினாலே அதை வனைந்த, பிறகு உளர்த்தி, தேவையான வெப்பத்தினாலே சுட்டு, ஒரு நல்ல நேர்த்தியான உருவத்தில் ஒரு பாத்திரத்தை உண்டாக்கி, அதை நாம் உபயோகபடுத்தும்படியாய் நம்மிடத்தில் ஒப்படைக்கிறான்,

ஆம் தேவ ஜனமே மண்ணான நம்மையும், தாயின் கர்பத்தில், உண்டாக்கி, பாதுகாத்து, பிரசவிக்க செய்து, ஒரு தாய் தேற்றுவது போல தேற்றி , வளர்த்து, இந்த உலகத்திலே அவர் நமக்காக உண்டாக்கின தேவ ஆசீர்வாதத்தினாலே நிறைத்து, வழி நடத்தி வருகிறார்.

**நீர் என் உள்ளிந்திரியங்களைக் கைக்கொண்டிருக்கிறீர்; என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர்.( சங் 139:13)**

பிரியமானவர்களே கர்த்தருடைய கை எலியாவின் மேல் இருந்ததினால் அவனுடைய ஜெபங்கள் கேட்கபட்டது, காகங்களால் கூட போஷிக்கப்பட்டான். தன் ஜீவனை எடுத்துக்கொள் என்று வேண்டிய பின்னும், கர்த்தர் அவன் ஜீவனை காத்து, தேவனுடைய பர்வதம் மட்டும்நடந்து போனான், காரணம் எலியா கர்த்தருக்காக வெகுவான பக்தி வைராக்கியமாய் இருந்தான்.

ஆம் பிரியமானவர்களே! நாமும் நம் தேவாதி தேவன் மேலும், கர்த்தர் உண்டு பண்ணி 45 ஆண்டுகள் நடத்தி வருகிற சபை மீதும் பக்தி வைராக்கியத்துடன் இருப்போம்! நாம் வேண்டுகிற காரியங்களை கர்த்தர் கரத்திலிருந்து பெற்றுக்கொள்வோம்!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான தேவ ஜனமே! நமக்கும் இக்கட்டுகள் வரலாம், யோபுவின் சரித்திரத்தை பார்க்கும் போது யோபு 10:8,9-ல் வாசிக்கிறபடி களிமண்ணிலிருந்து நம்மை உருவாக்கி ( உம்முடைய கரங்கள் என்னையும் எனக்குரிய எல்லாவற்றையும் உருவாக்கிப் படைத்திருந்தும், என்னை நிர்மூலமாக்குகிறீர். களிமண்போல என்னை உருவாக்கினீர் என்பதையும், என்னைத் திரும்பத் தூளாகப்போகப்பண்ணுவீர் என்பதையும் நினைத்தருளும்.) நம்மை சில சமயங்களில் சோதனைக்குள்ளாக நடக்க செய்து, பொன்னிலும் மேலான நம்முடைய விசுவாசத்தை உறுதிபடுத்தி, முந்தின நிலைமையை பாக்கிலும், பிந்தின நிலைமையில் அதிக அதிகமாய் ஆசீர்வதிக்க கர்த்தர் சித்தம்கொண்டுள்ளார். அவருடைய கரங்களில் அடங்கி இருப்போம். ஏற்ற வேளையில் நம்மை உயர்த்த அவர் வலலமையுள்ள தேவன்.

ஆம் பிரியமானவர்களே நம்முடைய ஜீவிய நாட்களிலே. சில சமயங்களில் சோதனை வரலாம், உபத்தரவத்திற்குள்ளாளய் கடந்த போக நேரிடலாம், சோதனையை சகிக்கிர மனுஷன் பாக்கியவான், மறந்துவிட வேண்டாம் நாம் சோதிக்கபட்ட பிறகு அவருடைய கரத்திலே அலங்காரமான கிரீடமாக இருப்போம். நம்மை மீண்டுமாக வேற பாண்டமாக அவருக்கு உகந்த பாத்திரமாக வனைந்து கொள்வார். "குயவன் வனைந்துகொண்டிருந்த மண்பாண்டம் அவன் கையிலே கெட்டுப்போயிற்று; அப்பொழுது அதைத் திருத்தமாய்ச் செய்யும்படிக்கு, தன் பார்வைக்குச் சரியாய்க் கண்டபடி குயவன் அதைத் திரும்ப வேறேபாண்டமாக வனைந்தான்.( ஏசாயா 18: 4ன் படி)

மிதியிட்ட ஒரே களிமண்ணினாலே குயவன் ஒரு பாத்திரத்தைக் கனமான காரியத்துக்கும், ஒரு பாத்திரத்தைக் கனவீனமான காரியத்துக்கும் பண்ணுகிறதற்கு மண்ணின்மேல் அவனுக்கு அதிகாரம் இல்லையோ? ( ரோமர் 9:21)

ஆம் பிரியமானவர்களே! நம்மை கனமான காரியங்களுக்கு கர்த்தர் எடுத்து பயன்படுத்த வேண்டி ஜெபித்து அவருடைய கரங்களுக்குள் அடங்கி இருப்போம், ஜெயம் பெறுவோம், சபையிலும் நிலைத்திருந்து தேவ மகிமைக்காக. ஆத்தும ஆதாயப் பணிகளை செய்து, சபையை கட்டுவோம்!!!

ஒரு சந்ததி அவரை சேவிக்கும் அது தலை தலைமுறையாய் இது அண்டவருடைய சந்ததி எனப்படும் (சங் 22:30 )

பிரியமானவர்களே இந்த அருமையான சந்தர்பத்தில் நம்முடைய சபையை உருவாக்கி நடத்தினவர்களுக்கும், நமக்கும் நம்முடைய சந்ததிக்கும், தேவன் நல்லவராகவே இருந்து நம் ஒவ்வொருவரையும் கர்த்தர்தாமே ஆசீர்வதித்து நடத்துவாராக. ஆமென்

**தேவ சமாதானம் நம் அனைவரோடும் இருப்பதாக!!! ஆமென்**

கிறிஸ்துவின் பணியில்
அன்பு சகோதரன்
ஜெயசேகர்

## நித்திய சூரியனே

குவைத் என்னும் ஊரில்
அகமதி என்ற குளத்தில்
ஒளி வீசும் சூரியனே!

காலை மலர்ந்திட்ட தாமரை – மீது
உன் கதிர் சுடர் வீசிட . . .
மாலை மலர்ந்திட்ட அல்லி– மீது
உன் வண்ண சுடர் வீசிட . . .

அலை மீது வீசிடும் தென்றலாய்
கரை கடந்து செல்கிறாய் . . . என நினைக்க,

உன்னை சுற்றி காந்த மலர் – பொய்கை கூட்டம்
இல்லை வண்டுகள் முகர்ந்திட
பசியாற்றிட . . .

எண்ணெய் வாசம் வீசும் பாலையில்– பனி
என்னும் சோலையில் – கால் பதித்த
எங்கள் பாதங்களை – உம் நிழலிலே
வந்தடைய செய்தாய் – நித்திய
வாழ்வினை பயிலும் கூடமாய்
கூட்டி சேர்த்தாய்.

கூடுவோம், பாடுவோம் – குடும்ப
உறவுகலானோம் உம்மாலே

இன்று மிகிழ்ந்திட மனங்கள் இனிக்கிறது
நினைவு கூர்ந்து நின் கிருபைகளில்
நாங்கள் கிருபையில் கொண்டாட
குதுகளம் பூத்திட்ட
மழலையரும் மனம் பதித்திடும் நிகழ்வுகளாய்
சிறுவரும், சிறுமியரும் சிந்தனையை தூண்டிட
வாலிபரும், கன்னிகைகளும் கரம் கோஷம்
எழுப்பிட
குடும்பங்கள் மூப்பர்கள் வந்தனம் செலுத்திட
அனைவரும் வாழ்த்துகள் கூறி வரவேற்கிறோம்

உம் ராஜ்ஜியத்தின் அங்கத்தினராய்
புதிய ஆண்டினை நினைத்து நினைத்து நெஞ்சம்
மகிழ்ந்திட
பூரிக்கின்றோம் நெஞ்சம்
அகமதி தமிழ் திருச்சபை
நித்தமும் சேனைகளாய் எம்மோடு தொடர்ந்திட
நின் வருகை மட்டும் வாழ்ந்திட வாழ்த்துகிறோம்

அன்புடன் வாழ்த்தும்
ஜெப ஊழியர்
**சகோ. மு. எபெனேசர் குடும்பம்**

பாடுகளின் வழியாக பரலோகம்
வலிகளை மறக்க வழிகளை தேடினேன்
பாவங்களை மறைக்க பரிகாரம் தேடினேன்
தேவைகளை சந்திக்க தெய்வங்களை தேடினேன்
என்னென்னவோ தேடி எத்தனையோ
தொலைத்தேன்
வழியாக, பரிகாரியாக,
தெய்வமாக எனைத் தேடி நீர் வந்தீர்
பாடுகள் பல கண்டும்
நான் பாதேசி ஆகவில்லை
வாதைகள் வந்தும்
நான் சிதைந்து போகவில்லை
சத்தியமாய் நம்புகிறேன்
நிச்சயமாய் நீர் செய்வீர் என்று
பாடுகள் பல தாண்டி
பரமதேசம் செல்வேன் நான்
பரமனின் பலம் கொண்டு
பாடுகளை வெல்வேன் நான்
சத்திய வார்த்தைகளை கேட்க
சபை ஒன்றை கொடுத்தீர்
சமாதானம் தந்து
ஒவ்வொரு நாளும் காத்தீர்
பல ஆண்டு பாதுகாத்தீர்
பத்திரமாய் எங்கள் சபைகளையே
சாட்சிகளாய் நிற்கின்றோம் அகமதி தமிழ் திருச்
சபையினிலே. . .

கிறிஸ்துவக்குள் அன்பு சகோதரி
**வனிதா காளிமுத்து**

## அகமதி தமிழ் திருச்சபையின் ஆண்டுவிழா 45

இயேசுவின் ஆலயம் – எங்கள்
இல்லத்தின் இல்லறம்
துதியும், கனமும் இங்கே– நாங்கள்
சோர்ந்து போவது எங்கே

அன்று 40 வருடம் ஆனது
கானானை காண
இன்று நாற்பத்து ஐந்தாம் ஆண்டு காண்கிறோம்
சபையாகிய எங்கள் கானானை

அவ்வளவாய் உம்மை சேவிக்க
சொந்ததேசத்தில் சுதந்திரம் இல்லை
இவ்வளவாய் இந்த சேவைக்காய்
அந்நிய தேசத்தில் ஆசீர்வதித்தீர்

அகமதியில மட்டுமல்ல

எங்கள் திருச்சபை
அகம் முழுவதுமே
எங்கள் ஆண்டவரின் சபையே

நாற்பத்தி ஐந்தாம் ஆண்டு விழா இதை
ஆண்டு வந்தது எங்கள் அன்பு இயேசுவினால்
விஷேசத்தின் நாள் அல்ல– இது
சுவிஷேசத்தின் பெருநாள்

கிறிஸ்துவுக்குள் அன்பு
சகோதரி வனிதா காளிமுத்து

## Prise the Lord

கர்த்தருடைய பரிசுத்த நாமம் மகிமைபடுவதாக கர்த்தருக்குள் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே இந்த செய்தியின் வாயிலாக உங்களை சந்திபதில் மிக்க மகிழ்ச்சி, கர்த்தருடைய நாமம் மகிமைபடுவதாக "பயம்" என்கிற தலைப்பிலே கர்த்தருடைய வசனத்தை தியானிக்க கர்த்தர் தாமே கிருபை செய்வாராக. நீதி 8:13 " தீமையை வெறுப்பதே கர்த்தருக்கு பயப்படுகிற பயம்".

சங் 56:4 "தேவனை நம்பியிருக்கிறேன் நான் பயபடேன் பயத்தை குறித்து அனேக காரியங்களை மிகவும் தெளிவாக வேதத்தில் பல இடங்களில் நாம் வாசிக்கிறோம். குறிப்பாக வார்த்தையாகிய இயே–சுவை பக்தியுடனும், பரிசுத்ததுடனும், பயபடுகிறபோது, "அவர் அனேக நன்மைகளையும் ஆசிர்வாதங்களையும் கற்று தருகிறவராகவும் இருக்கிறார்.

நீதி 1:7 "கர்த்தருக்கு பயபடுதலே ஞானத்தின் ஆரம்பம்" சங் 115:13 கர்த்தருக்கு பயபடுகிற பெரியோ–ரையும், சிறியோறையும் ஆசீர்வதிப்பார்.

எரேமியா 30:10 நாம் வாசிக்கும் போது யாக்கோபே நீ பயப்படாதே என்று சொல்லி அவர்களுக்கு இரட்சிபின் ஆசீர்வாதத்தையும் யாக்கோபுக்கு அவன் தான் வாழ்கின்ற தேசத்தில் வாழ்ந்து சுகித்திருக்க ஒரு வாக்குதத்தை தேவன் கொடுக்கிறார்.

கெலோசெயர் 3:22 நாம் வாசிக்கும் போது உலக பிரகாரமான பயத்தை குறித்து " வேலைகாரரே சரீரத்தின் படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு எல்லா காரியத்திலும் கீழ்படிந்து தேவனுக்கு பயப்படுகிறவர்களாக கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ்செய்யுங்கள்" இந்த உலகத்தில் வாழ்கின்ற கர்த்தருடைய இரட்சிப்பை பெற்று கொண்ட நாம் உலக காரியங்களிலும் கர்த்தருக்கு பயந்து உண்மையாகவும் உத்தமத்துடனும் இருக்க வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

கிறிஸ்துவ தியான புத்தகங்களில் பயத்தை குறித்து நாம் வாசிக்கும் போது பயம் என்பது ஒரு சாத்தானின் வேலை அல்லது சாத்தானின் ஆவி என்று பார்க்கிறோம். சாத்தானின் கிரியை யாரிடத்தில் அதிகமாக இருக்கிறதோ அவர்களிடத்தில் பயத்தின் ஆவி இருக்கிறதாக நாம் கண்டு கொள்ள முடியும்.

II இராஜக்கள் 17:38 " நான் உங்களோடே பண்ணின உடன்படிக்கையை நீங்கள் மறவாமலும் அந்நிய தேவர்களுக்கு பயப்படாமலும் என்று வாசிக்கிறோம் ஆனாலும் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடை–டய வார்த்தைக்கு செவிகொடமல் அவர்கள் அந்நிய தேவர்களுக்கு பயந்து மேடைகளை உண்டுபண்ணி சிலைகளை வழி பட்டார்கள். அதினால் இஸ்ரவேல் ஜனங்களை அதிகமாய் தேவன் உபத்திரவத்தின் பாதை–தயில் கடந்து சென்றார்கள்.

கர்த்தரை அறிந்த நாம் அவருடைய இரத்ததால் பிரிக்கபட்ட ஒவ்வொருவரும் பயம் என்பது என்ன? அது எந்த விதத்தில் உள்ள பயமாக இருக்கிறது என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். குறிப்பாக ஜீவனுள்ள தேவனை குறித்து அறிந்து அவரை விசுவாசிக்கிற நாம் அவருடைய இரட்சிப்பை குறித்தும், வருகையை குறித்தும் பயப்படாமல் மற்றவர்களுக்கு பயப்படாமல் சொல்லவேண்டும் அதை நாம் செய்யவில்லை என்றால் நியாயத்தீர்பின் நாளில் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்று வெளி 21:8 ல் சொல்லபடுகிறது. நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்று சிந்திபோம். கர்த்தர் தாமே ஆசீர்வதிபாராக, ஆமென்.

கிறிஸ்துவக்குள் அன்பு
சகோதரி. சஜின் ஜீவா ஃபிராங்ளின்

## ஆலமரமாகிய அஹமதி சபை

ஆணிவேராகிய இயேசுகிறிஸ்துவாய்
ஊற்றப்பட்டு
பக்க வேர்களாகிய வசனத்தால்
பினைக்கப்பட்டு
மரமாகிய அஹமதி சபையாக வளர்ந்து
கிளையாகிய பல ஊழியங்களை தாங்கி
விழுதுகளைப் போல் அநேகரை தாங்கி
இலைகளாகிய ஆத்துமாக்களை பெற்று
பழமாகிய ஆவியின் கனிகளை கொடுத்து
பறவை கூடுகளாகிய
பல குடும்பங்களை கொடுத்து
பறவை குஞ்சுகளைப்போல்
பல பிள்ளைகளை பெற்று
சந்ததி சந்ததியாக
வளர்ந்து பெருகுவாயாக . . .

கிறிஸ்துவின் வேலைக்காரன்
எபிநேசர்

## 45ம் ஆண்டு விழா வாழ்த்து

அஹமதி தமிழ் திருச்சபையின்
ஆண்டு விழா இது
அகமெல்லாம் பொங்கி நிறையும்
மகிழ்வின் நாள் இது

அண்டினோரை அரவணைத்து
கடந்த 45 ஆண்டுகள்
ஆண்டவரின் அன்பினை பொழிந்திட்ட
உன் மான்பினை நினைவு கூறுவோம்

மனம் நொந்து உன்னிடம் வந்தபோதெல்லாம்
மனபாரம் நீக்கினாயே
மனமகிழச்சி எமக்கு ஈந்து
புது வாழ்வு தந்திட்டாயே

மனபாரங்கள் நீங்க செய்து
மகிழ்ச்சியை விதைதிட்டாயே
மறை நூலை விளங்க செய்து
மனதில் ஒளி தீபம் ஏற்றினாயே

இயேசுவின் மனவாட்டியாய்
என்றென்றும் நிலைத்திருந்து
இவ்வலகு உள்ளவரை
உன் மீட்பு பணி தொடர்ந்திட
உளமாற வாழ்த்துகிறோம்

நன்றி பலிகளை செலுத்துகிறோம்
உலகெங்கும் உன் புகழ் பரப்பி
ஆத்தும ஆதாயம் செலுத்திடுவோம்



கிறிஸ்துவின் பணியில்
அன்ப சகோதரன்
ஸ்டாலின்
மற்றும் குடும்பத்தினர்

## வேண்டல் அரண்

நல்லதோர் உள்ளம் கொண்டோன் – நீ
நலம் பெற வாழ்த்துகிறோம்
நன்றி உறைக்கிறோம் நல்லவனே – உன்
நல்ல உள்ளத்திற்கு

நானிலம் போற்ற வியந்தோன் – அதற்கென
நாளும் பொழுதும் உழைத்தோன்
உன்னில்தான் எத்தனை விதம் –அதில்
உனக்கென உழித்தோன் பலவிதம்

பிறந்திட்ட – பிஞ்சுகள்
மலாந்திட்ட – மழலைகள்
வளர்ந்திட்ட விடலைகள்
முதிர்ந்திட்ட முனைவர்கள்
மறுக்கவோ மறைக்கவோ

முடியுமா? உன் மகிமைதனை – வாழ்வில்
விதைத்தோன் விளைவித்தோன்
வளர்த்தேன் வாழ்வித்தோன்
களை வளர்த்தோன் களை எடுத்து
காத்தோன் என்னை கரை சேர்த்தோன்

தவறினோம் தடம்புரண்டோம்'
தனிமையிலே தரணியிலே எம்மை
தாங்கினோன் தப்புவித்தோன் தெய்வ
தம்பிரான் உன் புண்ணியமே

வேண்டினோன் வினை தீர்த்து
அவன் வழி துடைத்து
வேண்டியவை விளையளித்து
அவன் மனம் நெகிழ்வித்த

உன்னை போல் வேறொன்றும்
நான் கண்டதில்லை
இக்கடல் சூழ் பூமியிலே
வேதம் மட்டுமே வாழ்வின்

வழியெனறைத்த
"வேண்டல் அரணே "
உன் அடி சரணம்..

கிறிஸ்துவுக்குள்
அன்புசகோதரி
நகோமி ஜாண்சன்
மற்றும் குடும்பத்தினர்

## மனமகிழ்ச்சி

காலங்கள் கடந்தாலும்
மாற்றங்கள் பல கண்டாலும்
நீற்காமல் அன்பில் ஒன்றிணைந்து
விட்டு கொடுப்பதில் இரக்கமுள்ளவராகி
தவறு செய்பவர்களை மன்னிக்கும்
சுாபவம் உள்ளவராகிய எங்கள்

அகமதி தமிழ் திருச்சபையின் 45 ஆண்டு
நிறைவு விழா திருநாளை காணும்
மகிழ்வான இத்தருனத்தில்
எங்கள் வாழ்க்கை என்பதின் பொருளுக்கு
அர்த்தம் தெரியத நிலையில்
உன்னை தேடின போது நீர் காட்டிய வழி
( வேத வார்த்தை) சங் 37:4
கருத்தாய் கடைபிடித்த போது
வசனம் என்னும் வாழையடி வாழையாய்
வம்சம் தழைத்து( அன்பு, ஆசை, அறிவு,
இன்பம், இனிமை) வார்த்தையால்
கூற முடியாத அளவிற்கு நான் உம்மால்
வாழ்ந்ததை எல்லாம், உம்மை
விரும்புவோரெல்லாம்
சுற்றி நின்று
உன்னை வாழ்த்தும் இந்நாள்
எங்கள் வாழ்க்கையில் சிறப்பு மிக்க பொன் நாள்

நீர் உதயமாகிய இந்நாளை போல
இன்னும் பல ஆண்டு உதயமாகி
பல உள்ளங்களை மகிழ வைக்கும்
அகமதி தமிழ் திருச்சபையே
உன்னை வாழ்த்தும் இந்த இனிய நாள்
உனக்கு மகிழ்ச்சியின் கொண்டாட்ட
நாளாக அமைய எங்கள் மனங்குளிர்ந்து
வாழ்த்துகிறோம்!!!

கிறிஸ்துவுக்குள் அன்பான
சகோ. ஸ்டீபன் குடும்பத்தார்


## விசேஷ அழைப்பு

"நீங்கள் தேவனால் அழைக்கப்பட்டவர்கள்
சோர்ந்து போகாதே . . . உன்னை அழைத்தவர்
உன்னுடனே கூட இருக்கிறார்."
தாவீதை அழைத்தேன் அவன் என்னை துதித்தான்!
ஆபிரகாமை அழைத்தேன் அவன் என்னை
விசுவாசித்தான்!
மோசேயை அவன் என் ஜனத்தை வழிநடத்தினான்!
உன்னையும் அழைத்தேன் நீ ஏனோ வர
மறுக்கிறாய்!
பிறருக்கு ஆறுதல் சொல்ல அழைக்கப்பட்ட நீ
உனக்கு ஆறுதல் சொல்ல யாரை தேடுகிறாய்?
தாவீதை பார் என்றேன் எதற்கு? துதிக்க!
நீ பார்த்ததோ அவன் பெலவீனத்தை
சிம்சோனை பார் என்றேன் எதற்கு? உனக்கும்
அந்த தைரியம் தேவை என்பதற்காய்!
ஆனால் நீ பார்த்ததோ அவன் வீழ்ச்சியை!
ஆசீர்வாதத்தை பார்த்த நீ பாடுகளை பார்த்தவுடன்
ஏன் ஓடுகிறாய்!
மனிதனை பார்க்க காலை தேய்த்த நீ என்னை
பார்க்க முழுங்காலை மறுப்பது ஏனோ !
கொம்பின் அபிஷேகம் கோலியாத்தை வீழ்த்தும்
என்றால் அக்கினி அபிஷேகம் உலகத்தை
அசைக்கும்.
உன் விசுவாசம் எங்கே?
உன் விசவாச வார்த்தை எங்கே?
அறிக்கை செய்! விசுவாசத்தோடு!!
வெற்றி உன்னை தொடரும் . . .
யுத்தத்தை கண்டு பயப்படாதே!
யுத்த களத்திற்கு வா!
யுத்தம் என்னுடையது என்றார் இயேசு!
ஜெயம் உன்னுடையது.

என் அன்பு நண்பர்களே கிறிஸ்துவ
வாழ்க்கை எப்பொழுதும் சிவப்பு கம்பளம்
விரிக்கப்பட்டு வரவேற்க்கப்படுகிற வாழ்க்கை
அல்ல! முட்களும், கரடு முரடுகளும்
கலந்ததுதான் கிறிஸ்துவ வாழ்க்கை!!

போராட்டங்களும், பிரச்சனைகளும்
வருகிற நேரங்களில் பிசாசானவன் உங்கள்
வாழ்க்கையில் குறுக்கிட்டு முற்றுப்புள்ளி( . )
வைக்க அவன் முயற்ச்சி செய்வான் நீங்களோ
இடம் கொடுத்து விடாதிருங்கள் முற்றுப்புள்ளி
அல்ல கமா ( , ) போட்டு உங்களை தொடர
வைப்பார் நம்முடைய ஆண்டவர்.
வாழ்க வலமுடன்
தேவன் நம்மோடு

கிறிஸ்துவுக்குள்( பெண்கள் ஐக்கிய தலைவி)
அன்பு சகோதரி
எப்சிபா ஸ்டீபன் குடும்பம்


முதன்மை ஊழியர்
செயலாளர்
பொருளாளர்
பெண்கள் ஐக்கிய தலைவி
வாலிப ஐக்கிய தலைவர்
ஒய்வு நாள் பாட-சாலை ஊழியம்
ஜெப ஊழியம்
பாடகர் குழு ஊழியம்
போக்கு வரத்து ஊழியம்
கேம்ப் ஊழியம்
திக்கற்ற பிள்ளைகள் ஊழியம்
மிஷனரி ஊழியம்
வலைதள ஊழியம்
செய்தி மலர் ஊழியம்
சபையின் கணக்கு தணிக்கையாளர்
சபையின் விதிமுறை கண்காணிப்பாளர்
அஹறமதி
தமிழ் திருச்சபை

# PRAISE EVANGELICAL CHURCH

No.2/632,Gowri Nagar,Mugalivakkam,Ch-600125.



Pastor.K.Joshua Stephen
Senior Pastor


Date: 10-11-2021.

கிறிஸ்துவுக்குள் அன்பான அஹமதி தமிழ் திருச்சபை மக்கள் அனைவருக்கும் நிகரற்ற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் 45 ஆம் ஆண்டு விழாவிற்கான அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன்

கடந்த 45 ஆண்டுகள் கர்த்தர் உங்களையும், ஊங்கள் ஊழியத்தையும் நேர்த்தியாய் நடத்தி எல்லா இக்கட்டுகளுக்கும் விலக்கி காத்து நடத்தியதற்காக நன்றியோடு துதிக்கிறேன். பிலி 1:5.6 வசனத்தின் படி உங்கள் ஊழியத்தில் கர்த்தர் தொடங்கிய கிரியைகளை இம்மட்டும் காத்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நாள் பரியந்தம் நடத்துவார் என்று விசுவாசித்து கர்த்தரை ஸ்தோத்தரிக்கின்றேன்

வருகிற புதிய ஆண்டில் "நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும், உன் தேவ–னுடைய கரத்தில் ராஜமுடியுமாயிருப்பாய்.( ஏசாயா 62:3) வசனத்தின்படி அஹமதி தமிழ் திருசபையார் அனைவரும் கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும், தேவனுடைய கரத்தில் ராஜமுடியுமாய் இருப்பீர்கள் என்று கர்த்தருடைய நாமத்தில் வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன் .

உங்கள் அனைவரையும் எங்கள் குடும்பம் மற்றும் திருச்சபையின் சார்பாக வாழ்த்துக்களை கூறுகிறேன், கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக, ஆமென்

இப்படிக்கு
கிறிஸ்துவின் பணியில்

(பாஸ்டர் K. ஜோஸ்வா ஸ்டீபன்)




Branch: Pastor K.Isaac Raja
Flt No. 100,surya Annexe ,
Natham, Kundrathur, Chennai-600069.

Mobile - 9840196826 / 9840277144
www.facebook.com/praiseevangelicalministries
Email - joshsteve777@yahoo.com

## அஹமதி திருச்சபையின் ஆண்டு விழா –45

இயேசுவின் ஆலயம் – எங்கள்
இன்பத்தின் இல்லறம்
துதியும், கனமும் இங்கே – நாங்கள்
சோர்ந்து போவது எங்கே
அன்று நாற்ப்பது வருடம் ஆனது கானானை காண
இன்று நாற்பத்தி ஐந்தாம் ஆண்டு காண்கிறோம்
சபையாகிய எங்கே கானானை
சொந்த தேசத்தில் சுதந்திரம் இல்லை
அவ்வளவாய் உம்மை சேவிக்க
அந்நிய தேசத்தில் ஆசீர்வாதித்தீர்
இவ்வளவாய் இந்த சேவைக்காய்
அஹமதியில் மட்டுமல்ல எங்கள் திருச்சபை
அகம் முழுவதும் எங்கள் ஆண்டவரின் சபையே
நாற்பத்தி ஐந்தாம் ஆண்டு விழா – இதை
ஆண்டு வந்தது எங்கள் அன்பு இயேசுவினால்
விசேஷத்தின் நாள் அல்ல– இது
சுவிசேஷத்தின் பெருநாள்

கிறிஸ்துவக்குள்
அன்பு சகோதரி வனிதா காளிமுத்து

## அஹமதி தமிழ் திருச்சபை 45வது ஆண்டு விழா

காவியம் பேசும் . . . சரித்திரம் கூறும் . . . எம்
அஹமதி தமிழ் திருச்சபையே . . .
கரம் கூப்பி, சிரம் தாழ்த்தி . . .
பணிகிறேன் உனையே. . .
கடல் கடந்தோம் . . .
கரம் கோர்த்தோம் . . .
ஜாதி, இன பேதமின்றி–இரு
கரங்கள் நீட்டி அனைத்தாய் நீ !!
ஊர் துறந்தோம் . . .உறவை பிரிந்தோம் . . .
தாய்–சேய் முகம் மறந்தோம்
கனவுகள் நனவாக வேண்டிட
வாழ்வை தேடி நகரும் – எங்கள்
உறைவிடம் ஆனாய் நீ ! ! !
சத்திய வேதம் சான்றோர் புகன்றிட
சிந்தையின் மதிமயக்கம் மமதை அகன்றிட
பரமன் இயேசுவின் தாள் பணிந்திட
நித்திய ஜீவன் ஈந்தாய் நீ ! ! !
பண்படுத்தி, பயன்படுத்த
தேர்ந்தெடுத்தாய் என்னை–
புண்படுத்தி பிரிந்தேன் நான்–
ஆறு அடித்து ஆற்றுநீர் விலகுமோ?
வா! என்றழைத்தாய்–
வானவர் துதியை– வாயின் நாவில் வைத்தாய்!
புரிந்தேன் நான்–
இறைப் பயணம் இதுவன்றோ–
பறையடித்து உரைப்பேன் நான்!
ஆண்டொன்று போனால் . . .
வயதொன்று போகும் . . .கடந்தாய்
நாற்பத்தி ஐந்து அகவை – நடந்தாய்
வீறு நடைப் போட்டு! !
தாய்மையின் தரிசனம்!
தாழ்மையின் நிதர்சனம்!
கண்டேன் உன்னில் . . .
வாழ வேண்டும் நீ!
நூறுநூறாண்டு காலம் ஆலமரம் போல்! ! !
ஒளி வீச வேண்டும் நீ!
கலங்கரை தீபம் போல்! ! !
மலர்ந்திட வேண்டும் நீ!
ஆதவன் கண்ட மலர் போல்!
எட்டு திசையெங்கும் – நறுமணம் வீசிட
வாழ்க! வாழ்க ! என்று வாழ்த்துகிறேன்!

இப்படிக்கு
சகோதரி.அனிதாஆரோக்கியதாஸ்
மற்றும் குடும்பதினர்.

## தேவனின் சரணாலயம்

சாதி, சமய வேறுபாடின்றி
எளிய நம் தமிழ் மொழியில்,
அப்பா, பிதாவே என்று கூப்பிட்டுத்
தொழுதுகொள்ளும்; என் தகப்பனின்
சரணாலயமாகிய அஹமதி தமிழ் திருச்சபையே!
ஏழைகளின் புகழிடமே!
எளியவர்களின் திடநம்பிக்கையே!
உம் வேதவசனத்தையே,
எமக்கு உணவாகத் தந்து;
ஆண்மீக வாழ்வில் உயரச் செய்யும்;
பலவித மொழிபேசும் ஊழியர்களைக் கொண்டு
சிறந்து விலங்கும் ஆலமரமே!
துதிக்கும் ஆத்துமாக்களையும்;
அநேக ஜெபவீராங்கனைகளையும் கொண்ட
உம் சிறப்பை நான் என்னவென்று சொல்வது?
அதுவே, எம் தேவனின் மகிமையன்றோ!
உம்மிடத்தில் சரணடைந்த!
எம் மக்களுக்கு, ஜீவத் தண்ணீரையே,
தந்த தெளிந்த நீரோடையே!
உம் அன்பு நிழலில் நாங்கள்
இளைப்பாறி; நித்தமும் மகிழ;
நாங்கள் ஓடோடி வருகின்றோம்;

எம் அஹமதி தமிழ் திருச்சபையின்
தோட்டத்தில் அநேக கனிகளைக்கண்டு
நாங்கள் அகமகிழ்கின்றோம்!
எம்மை ஆசீர்வதித்து; சிறப்பாக வாழவைக்க வந்த
சரணாலயமே! அரபு தேசமாகிய, குவைத் நாட்டில்
பல்லாண்டு காலம் சிறந்து விளங்க;
வாழ்த்துகின்றோம்! உம் புகழ், எங்கும்,
என்றென்றும் வீசட்டும்; உமக்கான பணிகள்
தொடரட்டும் என்று கூறி, உம் பாதத்தில்
நாங்கள் சரணடைகின்றோம்!
என் அன்பின் வாழ்த்துக்கள்!

உங்கள் சகோதரி,
**பியூலா மெர்ஸிபால்.**

அஹமதி தமிழ் திருச்சபை மூலம் என்னை
(என்னைப் போல் பலரை) வழிநடத்தும்.
அவர் யார்?
அவர் தான் இயேசுகிறிஸ்து!

1.இவர் வரலாற்றில் மிகப்பெரிய
மனித அவதாரம் எடுத்த கடவுள்!

2. இயேசுக்கு வேலைக்காரர்கள் இல்லை,
இன்னும் அவர்கள் அவரை
மாஸ்டர் என்று அழைத்தனர்.

3.பட்டம் இல்லை,
இன்னும் அவர்கள் அவரை
குணப்படுத்துபவர் என்று அழைத்தனர்.

4.அவரிடம் எந்த இராணுவப்
போர்களையும் வெல்லவில்லை,
ஆனால் அவர் உலகை வென்றார்.

5.அவர் எந்த குற்றமும் செய்யவில்லை,
இன்னும் அவர்கள் அவரை சிலுவையில்
அறைந்தார்கள்.

6.அவர் ஒரு கல்லறையில்
அடக்கம் செய்யப்பட்டார்,
ஆனால் அவர் இன்று வாழ்கிறார்;
கல்லறையும் காலியாக உள்ளது.

7.எங்களை நேசிக்கும்
அத்தகைய தலைவருக்கு
சேவை செய்வதை
நான் பெருமையாக கருதுகிறேன்.

என்றும்,
**சகோதரர் தாமஸ்.பா**

## அஹமதி தமிழ் திருசபையே

அஹமதி தமிழ் திருசபையே
அன்னையை போல்
அனைவரையும் ஆதரிப்பவனே
ஆதிமுதலானவரின்
ஆதிக்கம் நிறைந்த அன்பு சபையே
இருளும் ஒளியும்
கண்ணாமுச்சி ஆடவத
இறைவனின் சித்தரிப்பு
ஈவாக ஒரு சபையினை
எங்களுக்கு தந்தது

ஈசனின் அன்பளிப்பு
உயிர்தெழுந்த உன்னதமானவரின் மாட்சியை
ஊழியமாக அறிவிக்க
கிடைத்த எளிமையான அன்னை
நீ எங்கள் அஹமதி திருசபை

எல்லையை கடந்து வந்த எங்களுக்கு
ஏகதுணையாய் இருந்தது
இந்த அஹமதி திருசபை

ஐங்காயம் இயேசு ஏற்றது
தியாகத்தின் உச்சம்
ஒளிரும் ஒளியினை போல்
ஒரு சபையை தந்தது

ஒப்பில்லா இறைவனின் மகத்துவம்
ஔஷதமாம்
அஹமதி தமிழ் திருசபையே
நீ இன்னும் பல நூற்றாண்டு
வாழ்க! வாழ்க!

கிறிஸ்துவுக்குள்
அன்பு சகோதரன்
**ஆரோக்கியராஜ்**

# ஆலோசனை

ஆலோசனையில்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்துபோவார்கள்; அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும். நீதி 11:14

ஆம் கிறிஸ்துவுக்குள் பிரியமான வாலிப சகோதர சகோதரிகளே ! ஆரோசனை தருபவர்கள் சிலர் நல்ல அலோசனை தருவார்கள், சிலர் கெட்ட ஆலோசனை தருவார்கள், நம்முடைய வாழ்க்கையில் யாரிடம் ஆலோசனை கேட்கிறோம், எதை பற்றி கேட்கிறோம் என்பது மிகவும் முக்கியமானது, பல நேரங்களில் நாமம் சிந்தித்தது உண்டு, இந்த நபரிடம் ஆலோசனை கேட்தடு எனக்கு தீங்கை வரவழைத்துவிட்டதே என்று. அதனால் ஆலோசனையை கேட்க ஆவியாணவரின் உதவியை நாடவேண்டும்,

## 1 வாலிபரின் ஆலோசனை (2 நாளாகமம் 10:8)

ரெகோபெயாம் இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தி ஆலோசனை கேட்டது வாலிபர்களிடத்தில், வாலிபர்கள் னுபவத்தில் முதிர்ச்சி அடையாதவர்கள், அந்த வாலிபர்கள் அவனுக்கு தவறான ஆலோசனையை வழக்கினார்கள், தன் சொந்த நாட்டு ஜனங்களை கெவாக வழிநடத்த ஆலோசனை கூறாமல், கடினமாக வழி நடத்த ஆலோசனை கூறினார்கள். அனுபவம் குறைந்நதவர்களிடத்தில் ஆலோசனை கேட்பது தவறுதலாக ஆனது என்று வேதம் கூறுகிறது.

## 2. முதியோர்களின் ஆலோசனைகள (2 நாளாகமம் 10:6)

முதியவர்களிடத்தில் ரெகோபயாம் ஆலோசனை கேட்கிறான், இஸரவேல் ஜனங்களை எப்படி வழி நடத்தலதம் என்று, அதற்கு அவர்கள் தயையும்,பட்சத்தையும், காண்பித்து நல் வார்த்தைகளை பேச சொன்னார்கள், ஆனால் அவன் முதியோர் ஆலோசனையை தள்ளிவிட்டான்.

## 3. கர்த்தரின் ஆலோசனை ( சங் 32:8)

உன் மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன் : நமக்கு தேவையான ஆலோசனையை நமக்கு சரியாக சொல்லி நம்மை நீதியின் பாதையில் நடத்த வலியவர் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே.ஆனால் நாம் மனிதனிடம் ஆலோசனை கேட்டு துன்பத்தில் சிக்கி இன்னல் அனுபவிக்கும் போது தேவனிடத்தில் ஆலோசனை கேட்க வருகிறோம்.ஆவிக்குறியவன் நிதானிப்பான் எனறு வேதம் சொல்லுகிறது

1. தந்திரமான சர்பத்தின் ஆலோசனை கேட்டு ஏவாள் சாபத்தை வாங்கினாள்.
2. ஏவாளின் ஆலோசனையை கேட்டு ஆதாம் சாபத்தை வாங்கினான்
3. சிம்சோன் தெளிலாளின் ஆலோசனையை கேட்டுகர்த்தர் தன்னை விட்டு விலகினதை அறியாதிருந்தான்

அகவே நாம் நிதானித்து தேவனுடைய பாதத்தில் அமர்ந்து, ஆலொசனையை பெற்று
வாழ்வில் வெற்றி அடைவோம்
நித்தியத்தை சுதந்தரிப்போம்

**வாலிபம் இயேசுவுக்கே !!!**

## 46–வது வருடத்தில்...

46–வது வருடம் காணும்
எமது தமிழ் திருச்சபையே...
உமது புகழ் புண்ணியம் பெருகவும...
எமது பெருமை சிறுகவும்
கிறிஸ்துவின்நாமம் மகிமைப்படவும்...
அநேகஊழியங்களை தாங்கியும்...
என்றென்றைக்கும்நீடித்து நிலைத்து
நின்று...

ஆலமரம் போல் செழித்தோங்கி
வளர்ந்து...
அநேகருடைய கட்டுகளை அவிழ்த்து...
புதுவாழ்வு தந்து...
நீடூழி வாழ்வாங்கு வாழ வேண்டுமென
வாழ்த்தி வணங்கும் உங்கள் அன்பு

அன்பு சகோதரன்
ஏ.சுகுமாரன்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளுக்கு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் வாழ்த்துக்கள்!

இந்த மத்திய கிழக்கு நாட்டிலே அதுவும் இயேசுவை அறிந்தும் ஏற்று கொள்ளாத இஸ்மவேலர்கள் ஆதிக்கமாகிய இந்த தேசத்தில், பிழைக்க வந்த தேசத்தில் ஆண்டவருக்கென்று வைராக்கியமாக நின்று ஒரு ஆலயத்தை உருவாக்கி அதில் 45 வருட காலமும் ஆண்டவரை ஆராதனை செய்ய கர்த்தர் கிருபை செய்தார் அந்த ஆண்டவருக்கு முதலில் நன்றியை தெரிவித்துக்கொண்டு, இரண்டாவதாக நம்மை வழிநடத்திய அனைத்து முன்னோர்கள் மற்றும் மூப்பர்கள் அனைவரையும் இந்த வேளையில் நினைவு கூறுவோம் அவர்களுடைய குடும்பங்களுக்காகவும்,அவர்களுக்கும் நன்றி சொல்ல கடமை பட்டுள்ளோம்,

நெருக்கடியான நேரங்களில் அதாவது அன்னிய தேசத்தின் ஆக்கிரமிப்பு இருந்த நேரத்திலும் ஒன்றோ அல்லது இரண்டு நபர்கள் மாத்திரம் இணைந்து ஆராதனை செய்து நமக்கு கொடுக்கபட்ட நேரத்தை விட்டுவிட கூடாது என்ற காரணத்திற்காக இந்த சபை நிலைத்து நிற்க செய்த அத்தனை தியாகங்களுக்கும் ஆண்டவருடைய நாமத்தில் அவர்களுக்கு நன்றிகளை தெரிவிக்க வேண்டியது நமது கடமையும் கூட!

இந்த சந்தர்பத்தில் நானும் பாலைவன பசுஞ்சோலையான சபையாகிய இந்த ஆலமரத்தின் நிழலில் இரை(ற)யை தேடிவந்த பறவையை போல் அடைக்கலமானேன். இதன் அணைப்பில் 21 ஆண்டு காலமும் தஞ்சமடைந்தேன். உடன் பிறந்த சொந்தங்கள் போல் தாங்கிய அன்பு உள்ளங்களுக்கு நன்றி சொல்ல வார்த்தை இல்லை. இயேசுவின் அவயங்களாக ஒரு உருப்பு துன்பபட்டால் மற்ற அனைத்தும் துண்பப்படும் என்பதை போல ஒருவருக்கு ஒரு கஷ்டம் என்றால் மற் அனைவரும் வேதனைபட்டு தன்னுடைய அன்பையும், அன்பான வார்த்தையாலும், ஆண்டவரின் வசனத்தினாலும், பொருளாளும், எல்லாவற்றிலும் மேலாக ஜெபத்தாலும் நம்மை தாங்கியது இந்த சபை .

ஒரு நாளும் தொய்வில்லாமல் தேவனுடைய நாமத்தை பிரஸ்தாபடுத்த தவறியதே இல்லை இந்த சபை.

ஆண்டவரை இந்த தேசத்தில் ஆராதிக்க உதவி ஊழியமாக ஒன்பதை கண்டது இந்த சபை, சிறு பிள்ளைகளை என்னிடத்தில் வர தடை செய்யாதீர்கள் என்ற வேத வசனத்தின்படி சபையின் குழந்தைகளுக்கு ஒய்வுநாள் பாடசலை, தேவ தாசர்களை தாங்குவில் சளைத்ததில்லை இந்தசபை. திக்கற்ற பிள்ளைகளை ஆதரிக்க தவறியதில்லை இந்த சபை, ஆண்டவரை ஆராதிக்க விசுவாசிகளை ஏற்றிவர போக்குவரத்தை ஏற்றது இந்த சபை, நேர்த்தியாய் பாடி தேவனை ஆராதிக்க படகர்குழுவை ஏற்படுத்தியது இந்த சபை, சபையின் பிள்ளைகளின் தேவகைளை பூர்த்தி செய்ய ஜெபத்தால் தாங்க ஜெபக்குழுவை தந்தது இந்த சபை, குடும்பமாய் இல்லாது குடும்பத்தை பிரிந்து தேசத்திற்க்கு பணிக்காக வந்த சகோதரர்களை விசாரிக்க ஒரு குழுவை அமைத்தது இந்த சபை, உலகமெங்கும் உள்ள மக்களும் சபையின் செயல்பாடுகளை கண்டறிய தொழில் நுட்ப குழவை அமைத்தது இந்த சபை, சபையின் மாதாந்திர நடவடிக்கை ஊழியரின் தகவல்களையும் சபையின் நடவடிக்கையை அறிந்து கொள்ள ஒரு குழு இப்படி ஊழியங்களை கொடுத்து வளர்ந்து நிற்கும் இந்த சபை இன்னும் பல நூறு ஆண்டுகள் ஆண்டவரின் வருகைவரை நின்று நிலைத்திட நீடூழி வாழ வாழ்க வாழ்க என மனதார வாழ்த்துகிறேன்

அன்னிய தேசத்தில் ஒரு சபை அது<br>
அஹமதி தமிழ் திருச்சபை<br>
ஆராதிக்க ஏற்ற சபை<br>
இறை அருள் நிறைந்த சபை<br>
ஈகையில் சிறந்த சபை<br>
உன்னதத்தில் சேர்க்கும் சபை<br>
ஊக்கமாய் ஜெபிக்கும் சபை<br>
எண்ணில்லா ஊழியத்தை<br>
ஏற்று நடத்தும் சபை<br>
ஐயொன்பதாண்டாய்<br>
ஒப்பற்ற ஒரே சபை<br>
ஓங்கி வளாந்த சபை<br>
அதுதான் எங்கள் **"அஹமதி தமிழ் திருச்சபை"**

செய்தி மலர் ஊழியத்தின் மூலமாக<br>
அன்பு சகோதரன் ஜசக்துரை

கிருஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே! ஆண்டவராகிய இயேசு கிருஸ்துவின் நாமத்தில் நல் வாழ்த்துக்கள். 45 ஆண்டு முடிந்து 46 ஆவது ஆண்டில் பிரவேசிக்கும் அகமதி தமிழ் சபை அங்கத்தினர் யாவரும் நல்வாழ்த்துக்கள் கடந்த ஆண்டுகள் முழுவதும் நம்மை பாதுகாத்து நடத்தி வந்த தேவனுக்கு கோடாணகோடி ஸ்தோத்திரங்கள் ஏறெடுப்போம்

தாயின் வயிற்றில் தோன்றயது முதல் உங்களை தாங்கினேன், உங்கள் முதிர்வயதுவரைக்கும் நான் அப்படி செய்வேன் நரை வயது வரைக்கும் நான் அப்படி செய்வேன் நரை வயது மட்டும் நான் உங்களைத் தாங்குவேன் நான் அப்படி செய்து வந்தேன், இனிமேலும் நான் ஏந்துவேன் நான் சுமப்பேன், தப்புவிப்பேன் (ஏசாயா 63:3)

பிரியமான தேவனின் பிள்ளைகளே, நாம் ஆராதிக்கும் தேவன் பரிசுத்த தேவன் அவ் ஒரு போதும் நம்மை கைவிட மாட்டார்ஏன் என்றால் அவர் நம்மை உருவாக்கின சிருஷ்டி, கர்த்தர். ஆகவே எந்த சூழ்நிலையிலும் கர்த்தர் நம்மை கைவிடாமல் பாதுகாத்து வழி நடத்துவார்

தேவன் மறக'கஜற மனிதர் அல்ல, தாயும், தந்தையும் கைவிட்டாலும் கர்த்தர் என்னை சேர்த்துக்கொள்வார்.

இவ்வுலகின் மனித அன்பு மாறிப்போகும, தேவனின் அன்பு ஒரு போதும் மாறாது, நாம் மாறினாலும் அவர் மாறாதவர்,

அவர் நம்மை தாயின் கருவில் உருவாகும் முன்னே நம்மை அறிந்தவர் நம்மை கொண்டு என்ன செய்ய வேண்டுமோ, அதை அவர் செய்து முடித்தே செயல்படுவார்.

" அவர் சிறியவனை குப்பையில் இருந்து தூக்கி விடுகிறார். எளியவனை கப்பையில் இருந்து உயர்த்துகிறார். அவனை பிரபுக்களோடும், ஜனத்தின் அதிபதிகளோடும், உட்க்காரப்பண்ணுகிறார்.(சங் 113:7,8)

தேவன் ஒரு மனிதனில் செயல்படும் திட்டமானதை, ஒரு நாளும் தடை செய்ய முடியாது, இது தேவனுடைய சத்தியமாய் இருக்கிறது.

யார் யாரை கொண்டு எந்தெந்த காலங்களில், அவரது நாமத்தை உயர்த்த அவர் சித்தம் கொண்டாரோ, அந்தந்த காலங்களில் அவருடைய இராஜ்ரியத்தின் மகிமைக்கென்று, அவர் அவரது சித்தத்தின்படி நடத்திகொண்டே இருப்பார்.

" தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர் நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன். ( யோபு 42:2)

நம்மை இந்த தேசத்தில் அவரது இராஜ்ஜியத்தில் பிள்ளைகளாய் செயல்படுத்தவே தாங்கினேன் ஏந்தினேன் சுமந்தேன் இனியும் நான் அப்படி செய்வேன் என்று வாக்கு செய்தகர்த்தர் நம்முடனே கூட இருக்கிறார்.

இந்த புதி யஆண்டில் தேவன் அகமதி தமிழ் சபையை அளவில்லாமல் ஆசீர்வதித்து. வழி நடத்தி, குடும்பமாய் வாழ வாழ்த்துகிறோம்



கிருஸ்துவுக்குள் அன்புள்ள
போதகர் B. அருள்சாமுவேல்
மற்றும் குடும்பத்தினர்

கிருஸ்துவுக்குள் பிரியமுள்ள அஹமதி தமிழ் சபையின் அவயங்கள் யாவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்

45 ஆவது ஆண்டு விழா காணும் நமது சபை அநேக விசுவாசிகளும் அநேக ஊழியர்களும் ஒரு தாய் அதில் நாங்களும் ஒரு விழுது

இது போல பல விழுதுகள் உலகின் பல பாகங்களிலும் உண்டு

45 ஆவது ஆண்டு விழா காணும் சபையோரை ஏசாயா 58:11ன்படி " நீ நீர்பாய்ச்சலான தோட்டத்தை போலவும் வற்றாத நீரூற்றைபோலவும் இருப்பாய்" என்று ஆசீர்வதிக்கிறோம்



கிருஸ்த்துவுக்குள்
உங்கள் ஊழியன்
R. ரவிச்சந்திரன்
மற்றும் குடும்பம்

# Talent Show

## பிள்ளைகளுக்கு பரிசளிக்கும் விழாவின் சில காட்சிகள்

































அன்னிய தேசத்திலும்
ஆசீர்வாதமான சபை
எங்கள்
அஹமதி தமிழ் திருச்சபை
மூன்று தலைமுறையாக
எங்களை ஆசீர்வதித்து
வாழ வைத்த திருச்சபை
அண்டிவந்தவருக்கு
ஆறுதலித்த
எங்கள் அன்பின் சபை
45 ஆண்டுகள்
இந்த அன்னிய தேசத்தில்
ஆண்டவர் இரண்டாம்
வருகைவரை
நிலைத்திருக்க
வாழ்த்துகிறோம்
நீடுழி வாழ்க வாழ்கவென !!!
Private circulation